1968 மார்ச் 28]

பொதுப்பணித் துறை வரைவாளர்கள்

*332 வினு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

இம் மாநிலத்தில் தற்போது பொதுப்பணித் துறையில் ஓய்வு பெற்ற வேலை நீட்டிப்பு கொடுக்கப்பட்டிருக்கும் Draftsmen, Head Draftsmen முறையே எத்தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : சென்னை, பொதுப்பணித் துறையின் பணியிலிருந்து ஓய்வு பெற்று, நடப்பாண்டில் மீண்டும் வேலைக்கமர்த்தப்பட்ட வரைவாளர்கள். தலைமை வரைவாளர்கள் இவர்களின் எண்ணிக்கை கீழ்வருமாறு—

வரைவாளர்—தரம் 1 . . .	3
வரைவாளர்—தரம் 2 . . .	1
தலைமை வரைவாளர் . . .	1

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சபாநாயகர் அவர்களே, இப்படி வேலை நீடிப்பு கொடுத்து ஓய்வு பெற்றவர்களை வேலையில் வைத்துக்கொண்டிருப்பதால், உத்தியோக உயர்வை எதிர் பார்க்கும் வாலிபர்களாக இருப்பவர்கள் மனம் ஒடிந்து, உத்தி யோகத்தில் சலிப்பு அடைந்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? ஆமெனில், அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : யாருக்கும், நூற்றுக்கணக் கான பேர்களுக்கு வேலை நீடிப்புத் தரப்படவில்லை ஒரு ஐந்து பேர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. இந்த வரைவாளர்கள் திறமை யானவர்களாக இருக்கவேண்டும் என்ற காரணத்தினுல் இந்த ஐந்து பேர்களுக்கு பொறியாளர் இந்த ஆண்டில் வேலை நீடிப்பு தந்திருக்கிறுர்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தப் பொதுப்பணித் துறையில் டிராஃப்ட்ஸ்மென்னுக வேலை செய்பவர்கள் அதிகம் என்ற பெயரால் வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கிறுர்கள். அப்படியிருக்கும்பொழுது ஓய்வு பெற்றவர்களுக்கு வேலை கொடுப்பது முறையா? ஆகவே, அதற்குப் பதிலாக வேலை யிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு வேலை கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : வேலையிலிருந்து யாரும் நீக்கப்படவில்லை. தகுதிபெருதவர்கள், அன்குவாலிபைட் என்ற அளவிலே 35 பேர்கள் வேலையிலே வைத்துக்கொள்ளப்பட முடியாத சூழ்நிலை இருந்தது. ஆனுல், அரசு உடனே தலையிட்டு, அந்த 35 பேர்களையும் வேலை நீக்கம் செய்யாமல் இருக்கும்படி பொறியாளருக்கு அறிவித்திருப்பதன் மூலம், அவர்கள் இப்பொழுது வேலையில் இருந்து வருகிறுர்கள்.